பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி — வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி. 24—5—51. விலை அரையணா. | வெற்றி 15

பொள்ளாச்சி சங்கீத சபா அங்கத்தினர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

நம் பொள்ளாச்சி நகரில் சில வருடங்களுக்கு முன் ஒரு சங்கீத சபை நடந்து வந்தது. பிறகு ஏதோ காரணங்களினால் வேலை செய்யாமல் நின்று விட்டது எல்லோரும் அறிந்த விஷயம். மேற்படி சபைக்கு தற்போது ரூபாய் 3000-த்துக்கு மேல் இருப்பு இருப்பதாகத் தெரியவருகிறது. மேற்படி தொகையை சும்மா வைத்திருப்பதைக் காட்டிலும் ஏதாவது சிறந்த தர்ம ஸ்தாபனத்துக்கு கொடுத்து உதவி செய்தால் மிகவும் உபகாரமாக இருக்குமென்று நினைக்கிறேன். நானும் ஒரு அங்கத்தினன் என்னும் ஹோதாவில் விண்ணப்பித்துக்கொள்வது என்னவென்றால் அந்த தொகையை நம் நகரில் நடந்துவரும் ஆயுர்வேத ஆஸ்பத்திரி கட்டிட நிதிக்காக கொடுத்து உதவினால் மிகவும் நலமாகவும், பொதுஜனங்களுக்கு பலனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். மேற்படி தொகையை சிலர் ஹரிஜன ஸ்தாபனத்திற்கும், பொள்ளாச்சி டவுன் கிளப்பிற்கும் கொடுத்து உதவும்படி கேட்பதாகத் தெரிகிறது. ஹரிஜன் ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் வேண்டிய உதவி செய்து வருகிறது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். டவுன் கிளப்பை பொருத்த வரையில் எல்லா அங்கத்தினர்களும் தனவந்தர்கள். ஆகையினால் ஏழ்மை நிலையிலிருக்கும் ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு கொடுப்பது மிகவும் ஏற்றதும் அவசியமானதுமாகும். நம் பொள்ளாச்சி நகரசபை மேற்படி ஆஸ்பத்திரி விஷயத்தில் எவ்வளவோ செலவு செய்துவருவது மிகவும் போற்றுதற்குறியது. அத்துடன் கட்டிட நிதிக்காக மகாஜனங்கள் முன் வந்து உதவிசெய்தால் மிகவும் உபகாரமாக இருக்கும். சர்க்காரால் மேல்நாட்டு வைத்தியம் நடைபெற்று வந்தாலும் கூட அநேக மகாஜனங்கள் க்ஷய ரோக நிவாரண நிதிக்காகவும், புற்றுநோய் (கேன்ஷர்) நிவாரணநிதிக்காகவும் லக்ஷக் கணக்கில் வசூல் செய்து அந்தஸ்தாபனங்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதை பத்திரிகையின் வயிலாக அறிகிறோம். நம் தேசீய வைத்திய ஸ்தாபனங்கள் இருப்பது ஒரிவருக்கும் புலப்படாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம் அல்லது உதவி செய்ய விருப்பமில்லாமலும் இருக்கலாம்.

நாம் நம் நகரை பொருத்தவரையில் மேற்படி சபையின் பணத்தை அடிப்படையாகக் கொண்டு நம் நகரிலுள்ள ஆயுர்வேத ஆஸ்பத்திரி கட்டிட நிதி ஒன்று திரட்டி தற்கால சுகாதார வசதியுள்ள ஓர் கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்வது மிகவும் நலம்.

ஆஸ்டத்திரி கட்டிடம் இவைகளை ஏன் நகரசபை செய்யக்கூடாது என்று சிலர் கேட்கலாம். தற்சமயம் சர்க்காரே சர்க்கார் ஸ்தாபனங்களுக்கு பொது நிதி திரட்டுகிறது, அப்படி இருக்கும்போது நகரசபையில் அவ்வள[illegible] வசதி பார்ப்பது உசிதமில்லை. நம் நகரத்[illegible]லுள்ள வைத்திய ஸ்தாபனங்களுக்கு நம் ந[illegible] ஜனங்கள் ஏன் உதவக்கூடாது?

நான் கடைசியாக சங்கீத சபை அங்கத்[illegible]னர்களையும், சபைத்தலைவர் அவர்களையு[illegible] கேட்டுக்கொள்வது என்னவென்றால் அங்க[illegible]தினர்கள் மகாசபைகூட்டி மேற்படி தொகை[illegible] ஆயுரவேத ஆஸ்பத்திரி கட்டிட நிதிக்கா[illegible] கொடுத்து உதவும்படி எல்லா அங்கத்தின[illegible]களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதனா[illegible] ஏழை நோயாளிகளுக்கு உதவி செய்த பு[illegible]ணியமும் அங்கத்தினர்களுக்கு கிடைக்கு[illegible]

ஜெய் ஹிந்த்!

(ஒரு அங்கத்தினர்.)

அறிவிப்பு.

உள்ளூர் சந்தாதார்க்கு பத்திரிகை ச[illegible] வர கிடைக்க வில்லை என்றால் தகவல் எழு[illegible]தினால் தபால் மூலம் அனுப்புகிறோ[illegible] வெளியூர் சந்தாதார்கட்கும் சரியாய் பத்[illegible]ரிகை சேரவில்லை என்றால் தகவல் எழுதுங்க[illegible]

உபநயனம் அழைப்பு.

நாளது 25—5—51 வெள்ளியன்று காலை 6-30 மேல் 7-15 க்குள்,
எனது இல்லத்தில், எனது குமாரன்

செல்வன்: வெங்கட்டராமனுக்கு,

உபநயனம் நடைபெறும். விழாவை முன்னிட்டு, மாலை 5-மணிக்கு பாட்டுக் கச்சேரி நடைபெறும்.

சங்கித ரத்னாகர, அரியக்குடி **ராமானுஜ ஐயங்கார்,** பாலக்காடு **மணி,** முதலியவர்கள்.

இரவு 9–30 க்கு நாதஸ்வரம்.

வித்வ சிரோன்மணி வீரு[illegible] **பிள்ளை,** அண்டு பார்ட்டியாரால் நடைபெறும்.

நண்பர்கள், பந்துக்கள் கலந்து கொள்ளவேண்டுகிறேன்.

இப்படிக்கு,
S. விஜயராகவன்,
ஏஜண்ட்:– பர்மா ஷெல், பொள்ளாச்சி.

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிகை.

பொள்ளாச்சி

பொள்ளாச்சி 24—5—51. வியாழன்.

பாகுபாடு வேண்டாம்.

பீஹார் மாகாணத்தில் உணவு ரேஷனை 2-அவுன்சுக்கு உயர்த்தி விலையையும் றைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சென்னை மாகாணத்தில் மட்டும் இன்னும் -அவுன்ஸ் தான் கொடுக்கப்படுகிறது. சென்னை மாகாணமும், பீஹார் மாகாண ம், ஒரே மாதிரியான கஷ்டத்தில்தான் ருக்கிறது. இங்கும், அங்கும் இரண்டு டங்களிலும் ஒரே மாதிரியான பஞ்சம் ான். இந்நிலையில் பீஹார் மாகாணத் ற்கு மட்டும் 12-அவுன்ஸ். சென்னைக்கு -அவுன்ஸ் என்றால் இதைவிட வேறு நீதி இருக்க முடியுமா? சென்னை சர்க் கார் 10-லக்ஷம் டன் உணவு தான்யம் வேண்டுமென்று கேட்டதற்கு 5-லக்ஷம் டன்னுக்கு மேல் கொடுக்க மத்திய சர்க் கார் உணவு மந்திரி மறுக்கிறார். அதுவும் 3-லக்ஷம் டன் அரிசி கொடுக்கப்போவ தாக, பார்லிமெண்டில் சொல்லி விட்டு இப்போது 2-லக்ஷம் டன் அரிசிதான் கொடுக்கமுடியும் என்கின்றனர். தென்னா ட்டினர் அரிசிதான் அதிகமாகச் சாப்பி டக்கூடியவர்கள். இங்கு அரிசியைக் கொடுத்துவிட்டு வடநாட்டிற்கு ஏன் கோதுமையை அனுப்பலாகாது. கோது மை சாப்பிட்டு பழக்கமில்லாத தென்னா ட்டவர்மீது ஏன் திணிக்கவேண்டும். ஒரு மாகாணத்தில் உள்ளவர்கள் மட்டும் நன் றாக சாப்பிடவேண்டும் மற்றொரு மாகா ணம் பட்டினி கிடக்க வேண்டுமென்பது என்ன நீதி. எல்லோரும் இந்நாட்டு மன் னர்கள் என்று கூறுகிற நேரு சர்க்காரில், சாப்பாட்டு விஷயத்தில் வித்தியாசம்; எத ற்கு? வடநாட்டவர் உணவு மந்திரியாய் இருப்பதால் தென்னாட்டை கவனிப்ப தில்லை என்று கூறுவதா? அல்லது நமது மந்திரிகள் இங்குள்ள நிலையை சரியாய் எடுத்துச்சொல்லி, நமது வேண்டிய அளவு, உணவு தான்யத்தை வாங்கச் சக்தியற்றவர்கள் என்று கூறுவதா? ஜனவரி 1-ம் தேதி முதல் மே 17-ம் தேதி வரை இரண்டரை லக்ஷம் டன் பீஹாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதேகாலத்தில் சென்னைக்கு 184000-டன் வாஸ்தவத்தில் லக்ஷம் டன்தான் வந்திருக்கிறது இம்மாதிரியான அசிரத்தை எதற்கு, பீஹார் மாகாணத்தில் 4039-நிவாரணக் கடைகள் திறக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் 1700-கடைகள் தான். இந்தநிலை ஏன்? இவைகளை எல்லாம் கவனித்து நமக்கும் 12-அவுன்ஸ் கிடைப்பதற்கு உடனே நமது மந்திரிகள் வழிசெய்தாக வேண்டும். இல்லையேல் பீஹார் மந்திரிகளுக்கு இருக்கும் திறமை நமது மந்திரிகளுக்கு இல்லை என்றுதான் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்காரிடம் நிலைமையைஎடுத்துச்சொல்லிவாங்கி நமக்கு உணவு அளிக்க திறமையில்லாதவர்கள் மந்திரி பதவியில் இருந்து கொண்டு நம்மைப்பட்டினி போடவேண்டாமென்று கோறுகிறோம்.

கூட்டங்கள்.

25—5—51வெள்ளி மாலை 4-30மணிக்கு முனிசிபல் ஆபீஸில் கவுன்சிலின் சாதாரணக்கூட்டம் நடைபெறும்.

27—5—51 ஞாயிறு மாலை தேர்நிலை வெளியில் காங்கிரஸ் பொதுக்கூட்டம் உண்டு. வெளியூர் தலைவர்கள் பலர் பேசுவர்.

இளைஞர் காங்கிரஸ்.

26—5—51 சனி காலை 9-மணிக்கு சின்னாம்பாளையம் கிராமத்தில் பொள்ளாச்சி இளைஞர் காங்கிரஸ் கிளை அமைப்புக்கூட்டம் நடைபெறும். அதில் பொள்ளாச்சி காரியதரிசி அ. பாசித், சோ. ஜி. இ. கா. அங்கத்தினர் அ. முத்துசாமி ஆகியோர்கள் கலந்து கொள்வார்கள்.

தியாகிகள் தினம்.

ஞாயிறு மாலை தேர்நிலை வெளியில் நகர கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர். ராமலிங்கம் அவர்கள் தலைமையில் தியாகிகள் தினம் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. அதுசமயம் சி. ட. கந்தசாமி, கோவை சின்னையன் மற்றும் பலர் பேசினார்கள். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நேயர் தபால்!

இரத்தக்கண்ணீர் மறைக்க.

நம் நகரில் இந்த பஞ்ச காலத்தில்சொல்லி முடியாத அளவு ஏழை கிராம மக்கள் வந்து தெருத்தெருவாய் பிச்சையெடுத்து பாதை ஓரங்களில் படுத்து தங்கள் வாழ்வைக் கழிக்கின்றனர். காலையிலிருந்து இரவுவரை ஒவ்வொரு வீடாக வாசலில் நின்று கஞ்சி கஞ்சி என்று ஏங்கி கிடைத்தும் கிடைக்காமலும் கலங்கி தங்கள் வாழ்வை எண்ணி இரத்தக் கண்ணீர் விடுகிறார்கள். இந்நிலை ஏன் வந்தது இந்தப்பரிதாபக் காட்சியை கண்ணால் கண்டால் கல் மனமும் கரையும். ஆகையால் இந்தக் கோரக்காட்சிகளை மாற்ற, ஏழைகளின் அழுகுரல் மறைக்க நம் நகர பிரபலஸ்தர்களும், சங்கங்களும் ஒன்று கூடி சென்ற ஆண்டு செய்தது போல் இவ்வாண்டும்ஏழைகளுக்கு கஞ்சி ஊற்ற வழி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(அ. பாசித்.)

‘பனங்காட்டு நரி’

நமது கேள்வி—பதில் பகுதிக்கு அரசியல் சம்மந்தமான கேள்விகள் மட்டும் அனுப்ப வேண்டுமென்று எழுதியிருந்தோம். அர்த்த மற்ற ஆபாசமான கேள்விகள் அனுப்பவேண்டாமென்றும், அனுப்பினால் கவனிக்கப்பட மாட்டாது என்றும் எழுதியிருந்தோம். அப்படியிருந்தும் சிலமடையர்கள்வேண்டுமென்றே சொந்தப்பெயர் போடாமல் ஆபாசமானகேள்விகள் அனுப்புகின்றனர், உடனே போடவும் கண்டிப்பாய் போடவும் போடாவிட்டால்—— என்றெல்லாம் எழுதுகின்றனர். இவர்களுக்கு எனது யதில் முட்டாள்களைப் பார்ப்பது முதல் தடவை யல்ல என்பதுதான். போடாவிட்டால்— — — என்றால் என்ன செய்ய முடியும் தயாராய் — — — வளர்த்துவைத்திருக்கிறேன். பார்வதிக்கு எத்தனை புருஷன். பரமசிவனுக்கு எத்தனை பெண்டாட்டி இந்த ஆராய்ச்சிக்கு நான் தயாரில்லை இந்த மடையர்களுக்கு எத்தனை தகப்பன் என்று கேட்டால் என்ன ஆவது? ஆகவே என்னிடத்தில் ஜால்ஜாப்புகள் நடக்காது என்பதை இனிமேலாவது அறியவும். நேர்மையான கேள்விகளுக்கு நேர்மையான பதில் கிடைக்கும். மற்றவைகள் குப்பைக் கூடைக்குப் போகும்.

(ஆசிரியர்.)

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

தரத்தில் உயர்ந்தவை
வெண்புரு பீடிகள்.

முத்துகுமார் ஸ்டோர்ஸ்,
தற்கால மின்சார விளக்கு
அலங்காரத்திற்கும், ஒலிபெருக்கி
அமைக்கவும் பிரசித்தி
பெற்றஇடம்.

S. P. M கொடிமஜீத் பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. B. செட்டியார்.

ராமு & கோ,
சோடா பேக்டரி, கடைவீதி

P பட்டாபி செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்ட்,
கடை வீதி.

வில்மார்க் பீடிகள்,
குணத்தில் உயர்ந்தது.

R. M. D. C. கூப்பன் கலெக்டர்
No. 1256
கூப்பன் அனுப்புவதற்கு தகுந்த இடம்:
டி. எஸ். ஆறுமுகம்
S. M. ஜோசியர் சந்து,

கண்டியம்மன் கம்பெனி,
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார் ஆயில் எஞ்ஜின், பம்பு
செட்டுகள் எலக்ட்ரிக் சாமான்கள்,
மற்றும் மெஷினரி சாமான்களும்
குறைந்த விலையில் எங்கள்
கம்பெனியில் கிடைக்கும்.

உரிமையாளர்:—
C. ரங்கசாமி கவுண்டர்.

(சிறுகதை)

கதவு தட்டியவர்!

(அ பாசித்.)

டக் ... டக் ... டக் ... ஸார் கதவு திறவுங்கள்.

யாரது.........!

அம்மா தயவு செய்து கதவு திறவுங்கள்!

கதவு திறக்கப்பட்டது.

ஆனால்...... அவன் உள்ளே செல்லத் தயங்கினான்.

மழை சோ......வென்று கொட்டுகிறது. இடியும் மின்னலும் மாறி, மாறி தங்கள் வேலைகளைத் திறம்பட செய்து கொண்டிருந்தன.

கதவு திறந்தவள் ஒரு இளம்பெண்.
கதவு தட்டியவன் ஒரு இளம் வாலிபன்.

அவன் ஏன் கதவு தட்டினான் என்று அறியவிரும்பினாள் அவள். ஆனால் அவனிடம் எப்படி பேசுவது. எப்படியோ தன்னை சமாளித்துக்கொண்டு அவனுடன் பேச வாயெடுத்தாள். அப்போது வானமே அதிரும்படியான இடி முழக்கம்! அந்த அதிர்ச்சியில் அவள் வாய் அடைத்துவிட்டது.

அவன் பேசலானான். நான் இவ்வூருக்குப் புதிது. இங்கு என் அத்தை வீடு தேடியலைந்தேன். இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை அதற்குள் மழையும் பலமாக வந்திடவே, வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி நின்றேன்.

ஆனால் மழைச்சாரல் நிற்க முடியாதபடி தடுத்து என் ஆடைகளையும் நனைத்துவிட்டது இடி ஓசையும், மின்னொளியும் என்னை மிகவும் பயப்படுத்தி விட்டன. இனி வெளியிலே எத்தனை நேரம் நிற்பது. இருளும் சூழ என் மனதிலும் பயம் சூழ ஆரம்பித்தது, அதனால்தான் யார் வீடாகயிருந்தாலும் கதவு தட்டினால் திறப்பார்கள், சிறிது நேரம் தங்கி மழை நின்றபின் போகலாம் என்றுதான் கதவு தட்டினேன் ...... மன்னிக்கவும்.

அவளுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அவனை ஒருமுறைஉற்றுப்பார்த்தாள். அவன் அப்போது காட்சியளித்த நிலைமைக்கண்டதும் அவளுக்கு அவன்மேல் பரிதாபம் ஏற்பட்டது. அவள் சிரித்தாள்! அவனும் ஏதோ சிரித்தான்!! உள்ளே வாருங்கள் என்று அழைத்துச்சென்று அவனுக்கு அமர ஆசனம் அளித்து தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள் அவனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. முன் பின் அறியாத ஒரு வீட்டில், ஊர் பெயர் தெரியாத தன்னை அதுவும் ஒருஇளம் பெண்...இவ்வளவு மரியாதை செய்வதா... என்று தன்னைத்தானே எண்ணிக் கொண்டான்.

உங்கள் பெயர் என்ன என்றாள் அவள்! என் பெயர் மாணிக்கம் என்றான்! என் பெயர் என்ன தெரியுமா? ... சரஸா ......என்றாள் அவள். சரஸா-- என்று பன்முறை அவன் வாய் முணு முணுத்தது. மாணிக்கம் என்று அவளும் ஒரு நாற்காலியை இழுத்து அவன் அருகில் உட்கார்ந்தாள். அவள் அவனை உற்றுப்பார்த்தாள். அவனுக்கு சிரிப்பாகவும் வெட்கமாகவும் வந்தது! அவளும் சிரித்தாள் அவனும் அவளுடன் சேர்ந்து சிரித்துவிட்டான். அறையெங்கும் கலகலவென்ற பேரொலி. அவள் ஏன் சிரிக்கிறாள் என்பது அவனுக்குத்தெரியாது. திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டன! மறுபடியும் எறிய ஆரம்பித்தன. அவை எறியவும் அணையவும் ஆரம்பித்தன! அதேபோல் அவன் மனம் டக் டக் என்று அடித்துக்கொண்டது.

மாணிக்கம் நான் உங்களை என்று நீட்டினாள்; என்ன சரஸா என்றான்! கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றாள். ஐயோ என்னை ... அவன் திடுக்கிட்டான். அதற்குள் சரஸா — சரஸா என்ற குரல் கேட்டு ஏனம்மா அழைத்தீர்கள் — இங்கு வாயேன். ஒரு திருடன் அகப்பட்டுக்கொண்டான் என்றாள் சரஸா. திருடனா! இதோ வரேண்டியம்மா என்றாள் அவள் தாய் மங்களம். மாணிக்கம் எழுந்து ஓட முயன்றான். சரஸா — விடுவாளா! அதற்குள் மங்களம் வந்துவிட்டாள்!

அடே நம்ம மாணிக்கமா! எப்போடா வந்தாய் என்றாள். அப்போதுதான் அவனுக்கு உயிர் வந்தது. சற்று தைரியமாகவே பேசினான். அத்தை இது யார் — பெரியவாளா இருக்கே என்றான். இவள்தான் சரஸா, என் மகள்! அடே — சரஸாவா — அடையாளமே தெரியவில்லையே, அத்தை, ஆமா — இவள் என அடையாளத்தை எப்படி கண்டு பிடித்தாள் எனறான் மாணிக்கம்.

என்ன அத்தான் — நீங்கள் கதவு தட்டும் போது — உங்கள் பையிலிருந்து — ஒருகடிதம் கீழே விழுந்தது. அது நீங்கள் மிலிட்டெரியில் பூனாவிலிருக்கும் போது என் அண்ணா எழுதியது. அதைக்கண்டதும் நீங்கள்தான் அத்தானென்று தெரிந்துகொண்டுதான் இவ்வளவு நேரம் விளையாடினேன் என்று குறும்புடன் சிரித்தாள். மாணிக்கம் அசடுவழிய அவளுடன் சேர்ந்து சிரித்தான்; மங்களம் ஒன்றும்புரியாமல் அவளும் சிரித்தாள்.

மாணிக்கம் எப்படியோ 10-வருஷங்களுக்குப்பின் அத்தையையும் அத்தை மகளையும் பார்த்து விட்டோமே என்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான்.

நடுரோடில்
நடவாதீர்கள்.

தபால் பெட்டி நெ. 25.

N.B:— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

பொள்ளாச்சி பழனி முருகன் சிட் பண்டு.

ரிஜிஸ்டர் நெ 4371. தபால் பெட்டி நெ. 38.

25 சுப்பு செட்டி மடம் தெருவு, பொள்ளாச்சி.

31—3—51 ல் எமது சிட்பண்டு முதலாவது பிரைஸ் குலுக்கி எடுக்கப்பட்ட பிரைஸ் நெம்பர்படி பிரைஸ் லிஸ்டுகளும் அனுப்பப்பட்டது. நமது இரண்டாவது பிரைஸ் குலுக்கும் தேதி 3—6—51-ஆகவிருப்பதால் டிக்கட் தேவையுள்ளவர்கள் எம்மிடமிருந்தும் எமது சோல் ஏஜண்டுகளிடமிருந்தும் டிக்கட்டுகளையும் புக்குகளையும் வாங்கி பூர்த்திசெய்த விற்டனை ஏஜண்டுகள் கமிஷன் ரூ. 3—0—0 நீக்கி பாக்கி ரூபாய் 9—8—0 யை மணியார்டர் மூலமாவது நேரிலாவது 5—5—51-க்குள் பணம் செலுத்துபவர்களுக்கு, தமிழ் வருஷப்பிறப்பு ஸ்பெஷல் பிரைஸ் கூப்பன் புக் 1-க்கு ஒரு கூப்பன் விதம் இனமாகக்கொடுக்கப்படும். ஆகையால் இன்றே எமது டிக்கட் புக்குகளுக்கு முந்துங்கள்.

குறிப்பு:- சோல் ஏஜண்டுகள் மற்றமுள்ளவர்களிடம் புக் வாங்கினாலும் அதற்குறிய தொகையை நேரடியாக எமது கம்பெனிக்கு செலுத்தி கேஷ்ரசீது அடையாள சீட்டுகளையும் பெற்றுக்கொள்ளவும். எம்மிடம் பணம் செலுத்தாமல் வரும் அடிக்கட்டுகளைக் கண்டிப்பாய் பிரைஸில் சேர்க்கப்படமாட்டாது. சோல் ஏஜண்டுகளிடம் கொடுக்கும் பணத்திற்கு கம்பெனியார் ஜவாப்தாரியல்ல.

உரிமையாளர் — K. S. சொக்கலிங்கம் செட்டியார், பொள்ளாச்சி.

கேள்வி—பதில்.

கே:— ராஜாமில் ரோட்டில் ஓயாது இரவும் பகலும் சூதாட்டம், குடி, விபசாரித்தனம் நடந்துகொண்டுவருகிறது இதை அதிகாரிகள் கவனிப்பதில்லை. இதனால் பலகுடும்பங்கள் கெட்டு சீரழிந்து போகும்போல் தெரிகின்றது இதை மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கலாமா?

(ஆறுமுகம்.)

பதில்:— ராஜாமில்ரோட்டில் மட்டுமல்ல அநேக வீதிகளில் நீர் குறிப்பிடும் செய்கைகள் நடந்துகொண்டிருக்கின்றது. இவைகளை கவனிக்க அதிகாரிகள் இருப்பதாகவே தெரியவில்லை: கட்டாயம் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டியதுதான்.

"பொள்ளாச்சி வாசி" வாழி.

சேரனொடு சோழவேந்தர் செங்கோல்
ஒச்சுதமிழ்
வீரமொழி தாச்கியந்த வியப்பு மிகு
ஆசியவின்
சாரமுற்ற கொள்கைகளை ஜனத்திரட்க்கு
மத்தியிலே
வாரமதாய் தருநமது பொள்ளாச்சி வாசி
வாழி.
கள்ளொடு, கரும்புசுவை, கற்கண்டில் நற்
கவிதை
துள்ளிட மக்கட் தூக்கம் தூண்டிடும்கோலாய்
நின்று
அள்ளுவ அரசு ஞானம் அறிந்திட தமி ர்
கூட்டம்
பொள்ளாச்சி வாசி உந்தன் புது விளக்கு
வாழி நன்றே.

(தா. நடராஜன், பொள்ளாச்சி.)

நேயர் தபால்.

சுகாதார இலாகா கவனிக்குமா?

நம் நகர் குப்பாண்டக்கவுண்டர் வீதி 5-ம் நெம்பர் வீட்டின் அருகிலிருக்கும் தண்ணீர்க் குழாயின் தீர்த்தேக்கத்தினால் ஏற்படும்கழிவு தண்ணீரானது, எங்கள் காம்பவுண்ட் சுவரை அழித்துவிடும்போலிருந்து. கடைசியில்உயிர் சேதமும் ஏற்படும்போல் தோன்றுகிறது. காரணம் சாக்கடை சரியில்லாமையால்தான் நான் அதிகாரிக்குப் பலமுறை விண்ணப்பித்தும் அதைப்பற்றி நாளதுவரை ஒன்றும் கவனிக்காமல் இருக்கிறார்கள் காரணம் ஒன்றும் அறியமுடியவில்லை. தீர்த்தேக்கமில்லாத சாக்கடையை சரிசெய்தும் இதுமாதிரி தீர்த்தேக்கமுள்ள இடங்களை கவனிக்காமல் இருக்கின்றார்கள். இதை தயவுசெய்து கவனிப்பார்களாக.

(செ. சண்முகம்.)

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.